# மலேசியர்களின் வலுவான ஒற்றுமையே நாட்டு வளர்ச்சியின் அஸ்திவாரம்

## மலேசிய தின வாழ்த்துச் செய்தியில் ஒற்றுமை அமைச்சர் வலியுறுத்தல்



புத்ராஜெயா, செப். 16-

நம்முடைய வெற்றியே நமது பலம். இதுவே நாட்டின் அபரிமிதமான வளர்ச்சிக்கு அஸ்திவாரம் என்று மலேசிய ஒற்றுமைத்துறை அமைச்சர் டத்தோ ஹலிமா முகமட் சாடிக் தம்முடைய மலேசிய தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு காரணங்கள் நம் நாட்டின் வெற்றிக்கு அளவுகோலாக இருக்கின்றன. இவற்றுக்கு எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டில் வாழும் பல இன மக்களின் ஐக்கியமும் ஒற்றுமையும் முக்கியக் காரணமாக இருக்கின்றன என்று அவர் கூறினார்.

நமது வெற்றி மிகவும் அர்த்தம் பொதிந்தது. பல்வேறு இனங்கள், சமயங்கள், கலாச்சாரங்கள் என்று ஒரு கலவையாக வாழ்ந்தாலும் ஒற்றுமையை நம்முடைய உயிர்மூச்சாக மதிப்பதால்தான் நம்முடைய இந்த வாழ்க்கை இன்று வண்ண மயமாகியிருக்கிறது என்று டத்தோ ஹலிமா குறிப்பிட்டார்.

KEMENTERIAN PERPADUAN NEGARA

இந்த வண்ண மயமான வாழ்க்கை நாம் நேசிக்கும் இந்நாட்டின் வளத்திற்கும் மேம்பாட்டிற்கும் அஸ்திவாரமாகவும் ஆணி வேராகவும் வலுப் பெற்றிருக்கிறது என்பதை அவர் தனது வாழ்த்துச் செய்தியில் சுட்டிக் காட்டினார்.

இன்றைய இந்த ஒற்றுமையை நாம் சாதாரணமாகக் கருதி விடக்கூடாது. அதனைக் கட்டிக்காக்கும் நம்முடைய முயற்சிகள் தொடர வேண்டும். சுபிட்சம் தழைத்தோங்க நம்முடைய உழைப்பும் சிந்தனையும் வலுப்பெற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இப்போது நாடு ஓர் இக்கட்டான நிலையில் இருக்கிறது. கோவிட்-19 தொற்றுக் கிருமிக்கு எதிரான நம்முடைய போராட்டம் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

அரசாங்கம் விதித்திருக்கும் எஸ்ஓபி நடைமுறைகளை மலேசிய மக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். புதிய வழமையில் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டும். நம்மிடையிலான பரஸ்பர மரியாதைகள், ஒழுக்க நெறிகள் தொடர்ந்து அனுசரிக்கப்பட வேண்டும் என்று டத்தோ ஹலிமா வலியுறுத்தினார். இவ்வாண்டு மலேசிய தினம் மிதமாகக் கொண்டாடப்பட்டாலும் மலேசியர்களிடையிலான ஒற்றுமை, பரஸ்பரம், சகிப்புத்தன்மை, சுபிட்சம் ஆகியவை தொடர்ந்து மணம் வீசி வலுப்பெற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஒற்றுமையின் உத்வேகத்துடன் மலேசிய தினத்தை ஒரே இதயமாகக் கொண்டாடுவோம். நாட்டின் மேலாண்மை குடையின் கீழ் மலேசிய மக்களாக ஒன்றிணைவோம். ஒற்றுமையுடன் வாழ்வோம். பாதுகாப்புடன் இருப்போம் என்று டத்தோ ஹலிமா தம்முடைய மலேசிய தின வாழ்த்துச் செய்தியில் அறைகூவல் விடுத்துள்ளார்.

Makkal Osai, 16 Sept 2020, m/surat 2

Akhbar : Makkal Osai
Tarikh : 16 September 2020
Muka surat : 2
Sentimen : Neutral

Tajuk : **Perpaduan rakyat Malaysia adalah asas pembangunan negara. Menteri Perpaduan menegaskan beberapa perkara dalam ucapan beliau sempena Hari Malaysia.**

Ringkasan : “Kejayaan bersama, kekuatan kita. Ini merupakan asas bagi pembangunan negara”,kata Menteri Perpaduan Negara, Datuk Halimah Sadique dalam ucapan beliau sempena Hari Malaysia. Terdapat pelbagai faktor yang menjadi tunjang kepada kejayaan negara kita. Namun pencapaian yang paling bermakna buat kita semua adalah keteguhan perpaduan kita. Beliau turut menyatakan, kesejahteraan yang kita menikmati pada masa sekarang ditumbuh dari kesediaan rakyat Malaysia mengamalkan semangat perpaduan walaupun kita dibesarkan dalam suasana pelbagai agama, bangsa dan budaya. Menurut beliau, Kekayaan budaya, kepelbagaian bangsa dan warna-warni kehidupan setiap rakyat Malaysia membentuk asas dan mencorakkan kemakmuran tanah air kita yang tercinta ini. Jangan sekali-sekala kita mengambil mudah perpaduan yang dikecapi. Usaha, kesedaran dan keinginan untuk melestarikan keharmonian antara kita semua harus terus diperkukuhkan. Beliau juga berharap agar seluruh rakyat Malaysia akan terus peka dan mematuhi SOP norma hidup baharu, di samping memelihara nilai-nilai murni dan kesopanan antara kita semua. Meski pun Hari Malaysia pada tahun ini diraikan secara sederhana, namun saya yakin bahawa rasa kebersamaan dalam kalangan rakyat Malaysia tetap terserlah dengan mengamalkan nilai-nilai yang menyatupadukan. Mari kita sama-sama menyambut Hari Malaysia kali ini dengan penuh bersemangat. Ini tentu akan terus mengekalkan sejahtera di bawah payung kedaulatan negara.